
அனைத்து இஸ்லாமிய உறவுகளுக்கும் மாலைக்கதிரின் நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகள்!




# தேர்தல் ஆண்டில் சகோதரத்துவத்தைப் பலவீனப்படுத்த பல்வேறுபட்ட இனவாதிகள் முயற்சி மேற்கொள்ளலாம்!

## நோன்புப் பெருநாள் வாழ்த்தில் சஜித் எச்சரிக்கை

சகோதரத்துவத்தை தொடர்ந்தும் சேதப்படுத்த ஒரு சிறிய இனவாதக் குழுவுக்கும் நாம் இடமளித்தல் கூடாது, என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வெளியிட்டுள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். 2►



மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 28 புதன்கிழமை 10.04.2024 கதிர் 225

# யாழ் ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் இன்று நோன்புப் பெருநாள் தொழுகை

உலக வாழ் முஸ்லிம்கள் இன்று புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் இன்று காலை யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மைதானத்தில் காலை ஆறு முப்பது அளவில் எம்.ஏ.பைய்சர் ஹாசினி மதினி ஜ/ம்மா மரியம் மஸ்ஜித் தலைமையில் 2►



# மொட்டுவை விட்டுச் சென்றோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையாம்

கட்சியின் ஒழுக்கத்தை மீறிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை ஒழுக்காற்றுக் குழுவுக்கு வழங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி, வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ள மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் நேற்றுக் கூடிய அரசியல் 2►



# வெளிநாட்டுப் பாடசாலைகளை அமைப்பதைவிட வளங்களில்லா பாடசாலைகளை காக்க வேண்டும்!

## ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

ஜனாதிபதி வெளிநாட்டு பாடசாலைகளை ஆரம்பிப்பதைவிட இலங்கையில் வளங்கள் இன்றி தவிக்கும் பாடசாலைகளை பாதுகாப்பதில் அக்கறை காட்ட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொது செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 5161 பாடசாலைகளும், 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 3000 பாடசாலைகளும் நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

பல பாடசாலைகள் வளப்பற்றாக்குறையை எதிர்நோக்குவதாக தெரிவித்த அவர், அதிகாரிகளின் அலட்சியத்தால் கிராமப்புற பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன், 70,000 ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளதாக தெரிவித்துள்ள அவர், மேல் மாகாணத்தில் மாத்திரம் 7000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் புத்தகங்கள் 2►

# அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க 13 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவாம்

## பத்து கிலோ அரிசி வழங்கல் 21 ஆம் திகதி ஆரம்பம் என்கிறார் சியம்பலாபிட்டிய

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க 13 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இதன்படி, கடந்த ஏப்ரல் மாதம் அரச ஊழியர்களின் சம்பளத்திற்காக மொத்தமாக 107 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தெமட்டகொடை விற்பனை நிலைய திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர்



மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, 27 இலட்சம் குடும்பங்களுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான 2►

# மாநகர ஆணையாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு கிருஸ்ணேந்திரனுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தவறான தகவல்களை வழங்கி நீதிமன்றை பிழையாக வழிநடத்தியதாக தெரிவித்தே இந்த வழக்கு கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாநகர ஆணையாளருக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது என்று நீதிமன்ற வட்டாரங்களிலிருந்து தெரிவருகின்றது.

(அ)

# அரச வங்கிகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

அரசுக்கு சொந்தமான வங்கி நிறுவனங்கள் தொடர்பாக முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான வங்கி நிறுவனங்களின் ஒட்டுமொத்த கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றில் நிலவுகின்ற பலவீனங்கள் காரணமாக, சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளின் போது வங்கிகள் கடுமையான பின்னடைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இவ்வாறான சிரமங்கள் மீண்டும் ஏற்படாமல் தடுக்கும் நோக்கில், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவினால் வங்கிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதற்கமைய, சர்வதேச நாணய நிதியம் வழங்கிய விரிவான நிதி வசதித் திட்டத்தில் உள்ளடங்கிய தேவைகள் அடிப்படையிலும், உலக வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் வளர்ச்சிக் கொள்கை நடவடிக்கைகளின் அடிப்படையிலும் மேற் கூறப்பட்ட சீர்திருத்தங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதற்கமையவே, இந்த சீர்திருத்த 2►

## மொட்டுவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம். பி. தெரிவித்துள்ளார். அதற்கமைய, அவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் அரசியல் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பொதுஜன பெரமுனவில் வெற்றிடமாகக் காணப்படும் தொகுதி அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விரைவில் பொருத்தமானவர்களை நியமிக்கவும் அதன் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, அனைத்து மாவட்டங்களுக்கும் மகளிர் ஒருங்கிணைப்பாளர்களை நியமிப்பதற்கும் அரசியல் குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு, கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடியது. (அ)

## தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் மாதம் பூராவும் நோன்பு நோற்று பின்னர் ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடும் ஈதுல் பித்ர் பெருநாள் இஸ்லாமிய மத நாட்காட்டியில் மிக முக்கியமான விழாவாகும். ரமழான் என்பது இஸ்லாத்தின் ஆன்மீகம் மட்டுமன்றி மனித மற்றும் சமூக விழுமியங்களை அங்கீகரிக்கின்ற அதனை பறைசாற்ற கிடைத்த ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மாதம் பூராவும் நோன்பின் சிறப்பைப் பேணி ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடப்படுகின்ற இந்த புனிதப் பெருநாளை, உலகிற்கு தர்மம் மற்றும் சமத்துவச் செய்தியை எடுத்துரைக்கும் மிக முக்கியமான சமய விழா என்றும் அழைக்கலாம்.

இலங்கை வாழ் சமூகத்துடன் பண்டைய காலம் தொட்டு இஸ்லாமியர்கள் நெருங்கிய சகோதரத்துவத்துடன் பேணிய உறவு உலகிற்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்தத் தேர்தல் ஆண்டில் சகோதரத்துவ பந்தத்தை பலவீனப்படுத்த பல்வேறுபட்ட இனவாதிகள் முயற்சிக்கலாம்.

ஆனால், அந்த சகோதரத்துவத்தை தொடர்ந்தும் சேதப்படுத்த ஒரு சிறிய இனவாதக் குழுவுக்கும் நாம் இடமளித்தல் கூடாது.

மக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டத்தின் போது இந்த சகோதரத்துவத்தின் கரங்கள் நாட்டுக்காக நீட்டப்பட்டதைக் கண்டோம்.

சிங்கள, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் என எந்த இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஒரு தாயின் பிள்ளைகளாக ஒரே தேசமாக நம் நாட்டிற்காக முன்னோக்கி வந்தோம். இந்த மகத்தான ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தன்று அந்த சகோதரத்துவத்தின் கரங்கள் எதிர்காலத்தில் வலுப்பெற வேண்டும் என்று நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன்.

அதன் மூலம் வங்குரோத்தாகி உள்ள நமது நாட்டை உலகின் முதல் நிலை நாடாக மாற்றத் தேவையான பலத்தை பெற எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையர்கள் போலவே உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் அமைதியான, நல்லிணக்கம் கொண்ட சகோதரத்துவம் வாய்ந்த ஈதுல் பித்ர் பெருநாளாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன், என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

(04)

## வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்ட கல்வி உபகரணங்களின் விலை பெற்றோர்களால் தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும், கல்விச் செலவிலிருந்து பெற்றோரை விடுவிக்க ஜனாதிபதியும் அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாடசாலைகளில் பெற்றோர்களிடமிருந்து குடிநீர் கட்டணத்தை வசூலிக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், அதற்காக அதிபர்கள் பெற்றோரிடம் பணம் வசூலிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும் டும் அவர் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ரெசி-36)

## அரச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்து கிலோ அரிசி வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள மொத்த குடும்பங்களில் பாதிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த நிவாரணங்களை பெறுவார்கள் எனவும் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இதேவேளை, பொருளாதாரம் நல்லதொரு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், வாகன இறக்குமதி தொடர்பில் நம்பிக்கை வைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-38)

## அரச வங்கிகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ரெசி-37)

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்துவா பிரசங்கமும் இடம்பெற்றது.

இதில் பலரும் கலந்து கொண்டு தமது வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். (01)

# பாடசாலை மாணவி காய்ச்சலால் மரணம்

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிரங்கனாதன் மதுமிதா (வயது - 16) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டதால் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்று மாதிரி மரணத்தைக் கண்டறிவதற்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# புத்தாண்டு சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணிலிடம் இன்று கையளிப்பு

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படி இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுபநேர கணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்றவைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# வெளிநாட்டில் இருந்து வந்தவர் குளியலறையில் சடலமாக மீட்பு

*சுவிஸிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஒருவர் வீட்டின் குளியலறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*நவாலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் (வயது – 55) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*தனது தாயாரைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் வெளிநாட்டிலிருந்து அவர் இலங்கைக்கு வந்துள்ளார். இந்தநிலையில், நேற்று குளியலறைக்குச் சென்ற அவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கட்டைபறிச்சானில் சிறப்பு நிகழ்வுகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டுக் கழகத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடாத்தப்படும் ஆரம்ப நிகழ்வினை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று செவ்வாய்க்கிழமை (09) மாலை ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது முதல் நிகழ்வாக பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக மூதூர் பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டு கழகத்தினால் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மரதன் ஓட்டம் , படகோட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கயிறிழுத்தல், சைக்கிளோட்டம், நீச்சல் உள்ளிட்ட பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# உலகமெங்கும் சமத்துவமும் சகோதரத்துவமும் மேலோங்க பெருநாளில் பிரார்த்திப்போம்

## எம்.எஸ்.தௌபீக் எம்.பி. அறிக்கை

(எஸ். சினீஸ் கான் - ஊடக செயலாளர்)



உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் இனிய நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம் எஸ் தௌபீக் அவருடைய பெருநாள் வாழ்த்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புனித ரமழான் நோன்பை நோற்று நல்லமல்களில் விழித்திருந்து வணங்கி இன்று பெருநாளை அடைந்திருக்கிறோம். இறை அச்சத்தோடு இவ்வருட நோன்பை எதிர்கொண்டு, நமது ஈமானை இந்த மாதத்தில் பலப்படுத்திக் கொண்டோம்.

பலப்படுத்திக் கொண்ட உள்ளங்களை இன்றைய தினத்தோடு விட்டுவிடாது வாழ்நாள் பூராகவும் செயற்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதோடு, ஏழை எழியோருக்கு முடியுமான உதவிகளை வழங்குவோம்.

அதேபோன்று பலஸ்தீனில் எமது உடன்பிறப்புக்கள் படும் இன்னல்களை புரிந்து, அவர்களின் சுபீட்சத்திற்காகவும் அங்கு நிரந்தர அமைதி நிலவவும் இறைவனிடம் இரு கரம் ஏந்தி பிரார்த்திப்போம்.

உலகு எங்கும் சமத்துவமும், சகோதரத்துவமும் மேலோங்கட்டும் என பிரார்த்தித்தவனாக உலக வாழ் அனைத்து முஸ்லிம் சகோதரர்களுக்கும் எனது நோன்பு பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன், எனவும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிப்பொத்தானையில் இன்று நோன்புப் பெருநாள் திடல் தொழுகை



(ஹஸ்பர்)

புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் இன்று இஸ்லாமியர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு நோன்பு பெருநாள் திடல் தொழுகை முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதனை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜும்மா பள்ளி நிர்வாகத்தினர ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த தொழுகையை உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் மற்றும் மௌலவி முர்சித் ஆகியோர் வழிநடாத்தினர்.



# மிதி வெடி

யாழ்ப்பாணக் கம்பசும், தமிழரசுக் கட்சியும் ஒண்டு பாருங்கோ...
கிணறு வெட்டப் பூதம் வந்த கதையாப் போச்சு..!

ரெண்டுமே தமிழர்களுக்குத் தலையெழுத்து எண்டு சொன்னாலும் குறைச்சலில்லை. ரெண்டையும் தமிழர்களால தள்ளி வைக்கவும் முடியாது : அள்ளி அணைச்சுக் கொண்டாடவும் ஏலாது...

ரெண்டிலையும் குத்து வெட்டுக் குழிபறிப்புக்குப் பஞ்சமில்லை..

ரெண்டும் ஒழுங்கா நடந்தால் உள்ளுக்க இருக்கிறவைக்கே பிடிக்காது. இப்பிடி இன்னும் கனக்கச் சொல்லிக் கொண்டே போகலாம்.

தமிழரசில நடக்கிற கூத்துகள் சொல்லி மாளாது! மாவையரோ கூட நிண்டு கூத்தடிச்சுக் கவுட்டுக் கொட்டின ஒருத்தர். இப்ப கட்சி யாப்பை மீறித்தான் எல்லாம் நடக்குது எண்டு பத்திரிகையளுக்கு ஒப்புதல் வாக்குமூலம் குடுக்கிறார். இரவிரவா மாவிட்ட புரத்தில போய் மந்திராலோசனை நடத்தேக்க உவருக்கு உதெல்லாம் தெரியேல்லயோ?

எல்லாரும் சொல்லேக்க எனக்கென்ன எண்டுட்டு நான் பேசாமல் ஒதுங்கிப் போனன். அது போலத் தான் இப்ப "கம்பஸ்" விசியங்களையும் கதைக்காமல் விடவேண்டிக் கிடக்குது...!

"கம்பஸ்"ல நடக்கிற கைங்கரியங்களை எழுதத் தொடங்கின நாளில இருந்து, கட்டுக் கட்டாக் கடிதங்கள் வந்தபடி இருக்குது. "போஃன்" கதைச்சுக் காது நொந்து போச்சு ... "சீ" எண்டு போச்சுது.

ஒரு வார்த்தையில சொன்னால் "உதுகள் திருந்தாதுகள் பாருங்கோ."

அது ரெண்டையும் விடுவம்.. எப்பிடி போராட்டம் அழிக்கப்படதை ஏற்க முடியாட்டிலும், ஏற்றுக்கொண்டு வாழப் பழகினமோ. அது மாதிரி "கம்பசை"யும், தமிழரசையும் மறந்தால் மட்டும் தான் மனதுக்கு நிம்மதி பாருங்கோ...

சொல்லுறதைச் சொல்லிப் போட்டன். கொஞ்சக் காலத்தில நீங்களும் விளங்கிக் கொள்ளுவியள். புல்லுருவியளால வந்த புற்றுநோய் பாருங்கோ... ஆழமாப் பரவிவிட்டுது... இனி வேலையில்லை...

"பணம் எண்டால் பிணமும் ஆ.. எண்டுமாம்..." கேள்விப் பட்டிருப்பியள் தானே? அப்பிடித்தான் இங்க ஒரு ஸ்ரேசன் மாஸ்ரர் ஆக்களிட்ட சேர்த்த காசைச் சுருட்டப் பார்த்து, மாட்டுப்பட்டு முழிச்சுக் கொண்டு திரியுறார்.

சம்பவம் இது தான், சாவகச்சேரியில வேலைபார்த்த சக உத்தியோகத்தர் ஒருத்தர் திடீரெண்டு மரணமானதால, அங்கின அவற்ற குடும்பத்துக்கு ஏதாவது உதவி செய்வம் எண்டு கொஞ்ச "ஸ்ரேசன் மாஸ்ரர்" மார் காசு சேர்க்க வெளிக்கிட்டிருக்கினம்.

ஒருத்தனுக்குத் துன்பம் வந்தால், இன்னொருத்தன் தோள் குடுக்கிறது தானே மனித இயல்பு? செத்துப் போனவரின்ர குடும்பத்துக்கு உதவி செய்ய எண்டு கேட்ட உடன காலி, ஹம்பாந்தோட்டையில இருந்து காங்கேசன்துறை வரையுமுள்ள பெரும்பாலான "ஸ்ரேசன் மாஸ்டர்" மார் இன, மத பேதங்கள் இல்லாமல் - அவரவர் இயலுமைக்கேற்றாற் போல பங்களிப்புச் செய்திருக்கினம்.

போனவருசம் "நவம்பர்" மாசம் எல்லாரும் காசு குடுத்திருக்கினம். மின்சாரம் தாறம் எண்டு சொல்லி, நிலத்தடித் தண்ணியைப் பழுது பண்ணின இடத்தில இருக்கிறவர் தான் "மெயின்". அவற்ற மக்கள் வங்கிக் கணக்குக்குத் தான் எல்லாரும் காசைப் போட்டவையாம். "நவம்பர், டிசம்பர், ஜனவரி" மாசக் கணக்கா சேர்ந்த காசு பற்றி ஒரு கதையும் இல்லை!

ஒரு குடும்பத்துக்குத் துன்பத்தில உதவ எண்டு சொல்லி காசைச் சேர்த்துப் போட்டு, தனியாள் ஒருத்தர் வைச்சிருக்கிறது சரியில்லைத் தானே?

எவ்வளவு சேர்ந்தது? என்ன கணக்கு - வழக்கு எண்டு ஒருத்தருக்கும் வெளிப்பில்லை.

அவையளின்ர "குறூப்"ல இருக்கிற ஒரு "அதிகப் பிரசங்கி" அது சம்பந்தமாக் கேள்வி கேட்டிருக்குது...

கேள்வி கேட்டவரைக் குட்டி அமத்துறதில் குறியா இருந்த காசு சேர்த்தவர் இண்டைக்கு வரையும், எவ்வளவு சேர்ந்தது எண்டு கணக்குக் காட்டவே இல்லை எண்டாப் பாருங்கோவன்? பொது வெளியில வேலை செய்யுறாக்கள் வெளிப்படைத் தன்மையோட இருக்க வேணுமெல்லோ...?

இலட்சக் கணக்காச் சேர்ந்த காசை, மாசக்கணக்கா வைச்சிருந்து வட்டி உட்பட வரப்பிரசாதங்களை அனுபவிச்சவருக்கு "குறூப்"பில கேள்வி கேட்டது கடுப்பாப் போச்சு.

தான் காசைக் குடுத்துட்டன் எண்டு காட்ட உடனடியா ஒரு "பம்மாத்து" வேலை காட்டியிருக்கிறார். இறந்தவர் இருந்த சங்கத்தால குடுக்கிற மரண சகாய நிதிக் கொடுப்பனவுக் காசோலையை வாங்கி, இறந்தவற்ற உறவினர் ஒருத்தரை "ஸ்ரேசனு"க்கு கூப்பிட்டு குடுத்துப் படமெடுத்துப் போட்டு அதை "குறூப்"பில போட்டிருக்கிறார்...

ஆரம்பத்தில, "ட்ரான்ஸ்பர்", "ப்ரமோசன்" எண்டு வரேக்க மேலதிகாரிகளுக்குத் "தண்ணி"வாங்கிக் குடுத்து காரியம் முடிச்சுக் காசு பார்த்த இந்த "மாஸ்டரோட" சேர்ந்து நிண்ட கன பேர், இந்தக் காசு சேர்த்த விசியத்தில கொஞ்சம் கடுமையா நிண்டிருக்கினம்.

ஒருத்தன்ர செத்தவீட்டில ஆதாயம் தேடுறதை ஆர் பார்த்துக் கொண்டிருப்பினம்?

எல்லாருமாச் சேர்ந்து மேலிடங்களுக்குக் கடிதம் எழுதிப் போட்டினம். விசியம் விவகாரமாகிப் போயிற்று எண்ட உடன காசைத் தன்ர கணக்கில வைச்சிருந்தவர், சத்தம், சலார் இல்லாமல் ஐந்து லட்சத்துப் பதினையாயிரம் ரூபாயை "ஒன்லைன்" மூலமா இறந்தவரின்ர தாய்க்கு மாத்தியிருக்கிறார்.

இதுக்குள்ள "ஸ்ரேசன் மாஸ்ரர் குறூப்"ல விசியத்தைக் கசிய விட்ட ஆக்களுக்கு அலுப்புக் குடுக்கத் தொடங்கி இருக்கிறார்.

தன்ர கணக்குக்கு வந்த காசு எவ்வளவு எண்டு இண்டைக்கு வரையும் கணக்குக் காட்டாமல் விட்டது, வட்டி மற்றும் வரப்பிரசாதங்களை அனுபவிச்சது எல்லாம் ஒரு புறமிருக்க, கவுண்டமணி - செந்தில் வாழைப்பழக் கணக்குப் போல "அது தான் இது: இது தான் அது" எண்டு சங்கத்தால குடுத்த காசோலையைக் காட்டினதால இப்ப பங்களிப்புச் செய்யாதவை கூட முறைப்பாட்டில கையெழுத்து வைச்சிருக்கினம். மேலிடத்தில விசியம் கொஞ்சம் "சீரியஸ்". கடும் நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு அழுத்தம் போல. ஆனாலும், காலங்காலமா காட்டின பம்மாத்துகள் போல இதுவும் கடந்து போகும் எண்டும் கதைக்கினம்!

என்ன நடக்குதெண்டு பொறுத்திருந்துதான் பாக்க வேணும்... !!

-நரமுனி-

# தேர்தல்களுக்கான வைப்புத் தொகை அதிகரிப்பு! ஜனாதிபதி வேட்பாளருக்கு ரூ.26 லட்சம் நிர்ணயம்



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிலிருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் கட்டுப்பணத்திற்கான வைப்புத் தொகையை 50,000 ரூபாவிலிருந்து 26 இலட்சம் ஷரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத்துடன், சுயேட்சைக் குழுவொன்றின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருக்கான வைப்புத் தொகையான 75,000 ஷரூபா 31 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடாளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளரின் வைப்புத் தொகை 11,000 ஷரூபாவாகவும், சுயாதீன வேட்பாளருக்கு 16,000 ஷரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த வேட்பாளர்களுக்கு திருப்பிச் செலுத்தப்படாத 1000 ரூபாவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வைப்பு தொகை 6,000 ஷரூபாவாகவும், சுயாதீன வேட்பாளர்களுக்கு 11,000 ஷரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைகள் சட்ட விதிகளின்படி தற்போதைய பொருளாதாரப் பின்னணிக்கு ஏற்றவாறு வைப்புத் தொகையில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டதற்கிணங்க ஜனாதிபதி மற்றும் நீதியமைச்சர் சமர்ப்பித்த பிரேரணையின் பிரகாரமே அதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறிப்பாக, வைப்புத் தொகை தொடர்பான தற்போதைய சட்ட விதிகள் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக திருத்தப்படவில்லை எனவும் பணவீக்கம் காரணமாக ஷரூபாய் மதிப்பு சரிவு காரணமாக, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட வைப்புத் தொகையை தற்போதும் ஏற்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ரெசி-39)

# கட்சியின் தலைவருக்கு நீதிமன்ற தடை உள்ளபோது சட்ட அனுமதியின்றி எவரும் கூட்டம் நடத்த முடியாது!

## சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றைய தினம் இடம்பெற்ற கூட்டம் சட்டவிரோதமானது எனவும், அதற்கமைய எடுக்கப்பட்ட தீர்மானம் நீதிமன்றில் முன்வைக்கப்படும் எனவும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் சட்ட விரோதமாக கட்சிக் கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

நிமல் சிறிபால டி சில்வாவின் அழைப்பின் பேரிலேயே இந்த கூட்டம் நடத்தப்பட்டது. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், அரசியல் சபையை அழைப்பதற்கான முழு அதிகாரமும் கட்சியின் தலைவருக்கே உள்ளது.

மாவட்ட நீதிமன்றம் அளித்துள்ள தடை உத்தரவின்படி தற்போது கட்சியின் தலைவர் பதவியில் எவரும் இல்லை. இந்தச் சூழ்நிலையில், கட்சியின் பதில் தலைவராக எந்தவொரு நியமனமும் நீதிமன்றத் தீர்ப்பின்படியே செய்யப்படல் வேண்டும்.

நேற்றைய சட்டவிரோத அரசியல் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க உட்பட அநேகமானோர் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அல்ல.

இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக சட்ட ரீதியில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதுடன், சட்ட கட்டமைப்பிற்குள் வழங்கப்படுகின்ற நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைய ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படும், என்று அவர் தெரிவித்துள்ளார். (ரெசி-35)




# பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சீருடையை அணிந்து ரி56 துப்பாக்கிகளுடன் 'கெடேட்' பயிற்சியில் மாணவர்கள்

## சட்ட நடவடிக்கைக்கு மூத்த அதிகாரியொருவர் கோரிக்கை

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் பயன்படுத்தும் சீருடையை அணிந்து ரி56 துப்பாக்கிகளை ஏந்தியவாறு கம்பஹா பிரதான பாடசாலையின் 'கெடேட்' குழுவொன்று அணிவகுப்பில் கலந்து கொண்ட சம்பவம் தொடர்பில் கம்பஹா தலைமையக பொலிஸார் நேற்று முன்தினம் (07) விசாரணைகளை ஆரம்பித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் சீருடைக்கு நிகரான ஆடைகளை அணிந்து அணிவகுப்பில் கலந்து கொண்ட இந்த மாணவர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் பயன்படுத்தும் அதே துணியையே பயன்படுத்தி சீருடையை தயார் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக, இந்த சீருடைகள் தைக்கப்படும் அனுராதபுரத்தின் துணிக் கடை ஒன்றின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சீருடை அணிந்த மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் (டிக் டொக்) தோன்றியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் சீருடை தயாரித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை 'கெடேட்'களுக்கு இரண்டு வகையான அங்கீகரிக்கப்பட்ட சீருடைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில், ராணுவம் அல்லது சிறப்புப் படையின் சீருடைகளை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை எனவும், இது தவறான முன்னுதாரணமாகும் எனவும், இதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் எனவும் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

'கெடேட்' அணிவகுப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளின் போது 'கெடேட்'களுக்கு புள்ளி 2.2 ரக வெடிமருந்துகளை மட்டுமே சுடக்கூடிய தனியான அரை தானியங்கி ஆயுதமே வழங்கப்படுவதாகவும், எனினும் இந்த மாணவர்கள் ரி56 துப்பாக்கிகளை கையில் ஏந்தியவாறு பயிற்சி அணிவகுப்பில் கலந்து கொண்டமை சிக்கல் மிக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான போர்ப் பயிற்சி பெற்ற பாதுகாப்புத் திணைக்கள அதிகாரி ஒருவருக்கே தானியங்கி துப்பாக்கி வழங்கப்பட வேண்டும் எனவும், பாடசாலை மாணவர்களுக்கு இந்த ஆயுதங்கள் யாருடைய தேவையின் பேரில் வழங்கப்பட்டுள்ளன என்பது குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெசி-26)

# மைத்ரி பாங்கொக் பறந்தார்

*முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று (9) தாய்லாந்து நோக்கி புறப்பட்டதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருடன் மற்றொரு குழுவும் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.*

*நேற்று அதிகாலை 12.55 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கு தாய் ஏயார்வேஸ் டிஜி 308 விமானம் மூலம் அவர் புறப்பட்டுச் சென்றதாகவும் மேலும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*(ரெசி–40)*

# விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிப்பு

காரைதீவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜா அவுஸ்திரேலியாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்வித்துறையிலும் ஊடகத்துறையிலும் 35 வருட கால அனுபவம் பெற்ற தம்பிராஜா சகா தேவராஜாவுக்கு அவுஸ்திரேலியா சிட்னி மாநகரில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு விழாவின்போது மேற்படி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகர் சிலை நிறுவுனர் உதயசூரியன்நாகமணி குணரெட்ணத்தால் இவ்விருது பரிந்துரைக்கப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது.

இவர், 1986 இல் டெலிக் ஆங்கில ஆசிரியராக, பின்னர் 1988 இல் விஞ்ஞான ஆசிரியராக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் நியமனம் பெற்றார். இவர் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான துறையில் பயிற்சி பெற்று அதே பாடசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக கடமை ஏற்றார். அதன் பின்பு 1999 இலிருந்து கடந்த 25 வருட காலமாக சம்மாந்துறை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமை ஆற்றி வருகிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் பூர்த்தி செய்தார். பின்னர் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

1986 களிலிருந்து வீரகேசரி, தினகரன், சுடரொளி, டெய்லி நியூஸ், மெட்ரோ மற்றும் இலங்கை வானொலி, வெளிநாட்டிணையங்கள் போன்ற பல ஊடகங்களுக்கு இன்று வரை எழுதி வருகின்றார்.

அன்று கிழக்கில் வெளியான விடிவானம், காலைக் கதிர், ஈழநாதம், அரங்கம் போன்ற பத்திரிகைகளில் எழுதியவர். கல்முனை நெற் இணையத்தளத்தின் பரிமாணம் பத்திரிகையின் முதல் பிரதம ஆசிரியராக பணியாற்றினார்.

இன்று யாழ் மண்ணில் வெளியாகும் காலைக் கதிர் மாலைக் கதிர் போன்ற பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார்.

சிறந்த ஆசிரியராக, தொழிற்சங்க வாதியாக, எழுத்தாளராக, பேச்சாளராக, அறிவிப்பாளராக, வர்ணனையாளராக, தலைவராக, நிர்வாகியாக பரிணமித்து வருகிறார்.

"ஊழியில் ஆளி" என்ற சுனாமி வரலாற்று நூலை 2005இல் எழுதி வெளியிட்டார் .

1992 இல் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்ற தலைவராக பணியாற்றிய வேளை சுவாமி விபுலானந்தருக்கு நூற்றாண்டு விழா சிலை எழுப்பியதுடன் அங்கு வருடாந்தம் வெளியாகும் கலைச்செல்வி சிறப்பு நூலுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார் .

இதைவிட அம்பாறை மாவட்ட கலாசார சாகித்திய விழாவில் 2007 2008 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரு தடவைகள் ஊடகத்துறை மற்றும் எழுத்து துறைகளில் ஆற்றிய பணிக்காக அம்பாறை மாவட்ட செயலகம் திகாமடுல்ல அபிமானி என்ற விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கியது. இலங்கை அரசின் அதி உயர் ஊடக விருதான ஜனாதிபதி ஊடக விருதுச் சான்றிதழ் இவருக்கு 2019 இல் வழங்கப்பட்டது.



இலங்கையின் உயர்ந்த ஊடகத்துறை விருதான மக்கள் சேவை ஊடக விருது 2007 இல் வீரகேசரி வார வெளியீட்டில் வளமின்றி வாழும் வளத்தாப்பட்டி மக்களின் அவலம் என்ற தலைப்பில் இவரால் எழுதப்பட்ட சிறப்பு கட்டுரைக்காக கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் வைத்து விருது வழங்கப்பட்டது.

2008இல் அம்பாறை மாவட்ட சிறப்பு ஊடகவியலாளர் விருது தேசிய பாதுகாப்பு தினத்தில் அனர்த்தம் தொடர்பில் சிறப்பான ஊடகத்துறை பங்களிப்புக்காக இரத்தினபுரியில் வைத்து அமைச்சர் மஹிந்த சமரசங்கவினால் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் இத்தாலி மற்றும் பாங்கொக்கிலும், சர்வசமயம் சமாதானம் கல்வி தொடர்பில் பங்களாதேஷ் மலேஷியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பயிற்சி பெற்றார்.

2019 இல் இலங்கை இந்துசமய கலாசசார அமைச்சு கொழும்பு தாமரைத் தடாகத்தில் வைத்து கலைச்சுடர் விருது வழங்கி இவரைக் கௌரவித்தது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளனம் செயலாளராகவும் சமயங்களின் சமாதானத்திற்கான ஒன்றிய செயலாளராகவும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்க உப தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

# மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் இன்று நோன்புப் பெருநாள் தொழுகை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை இஸ்லாமிய பிரசார மையம், அக்பர் ஜ/ம்ஆ பள்ளிவாசல் மற்றும் பாக்கியத்துசாலிஹாத் பள்ளிவாசல் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் இன்று காலை 6:20 க்கு நடைபெற்றது.



இம்முறை கடற்கரை திறந்தவெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) நடாத்தினார்கள்.




# கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆளுமைகள் ஐவருக்கு பாராட்டும் பிரியாவிடை நிகழ்வும்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிருவாக சேவை அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லும் இரு ஆசிரிய ஆலோசகர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று (09) கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூன்று கல்வி நிருவாக சேவை அதிகாரிகளான பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர்), யூ.எல். சாஜித் (உதவிக்கல்விப் பணிப்பாளர் - உடற் கல்வி மற்றும் நிந்தவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்), என். எம்.ஏ.மலீக் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம் மற்றும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர்), ஓய்வு பெறும் இரு ஆசிரிய ஆலோசகர்களான சீ. செல்வராஜா (விவசாயம்), எம்.எஸ். சஹ்துல் அமீன் (விஞ்ஞானம்) ஆகியோர் பாராட்டி, நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபிர், எம்.எச். றியாஸா, என். வருண்யா, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. சன்ஜீவன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு விசேட உரைகளையும் ஆற்றினர்.

நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் நடந்தேறிய இந் நிகழ்வினை ஆசிரிய ஆலோசகர் ஏ.றாஸிக் நெறிப்படுத்தியத்துடன் ஆசிரிய ஆலோசகர்களான ரீ.கே. பத்திரன, எம்.லக்குணம் ஆகியோரும் விடைபெறும் அதிதிகள் தொடர்பில் சிறப்புரையாற்றினர்.

# வவுனியாவில் நோன்பு பெருநாள் தொழுகை



வவுனியா, தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் புனித நோன்புப் பெருநாள் திடல் தொழுகை வேப்பன்குளம் குளக்கட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள திடலில் இன்றுகாலைநடைபெற்றது.

தொழுகையை அஷ்ஷெய்க் அல்-ஹாபிழ் ஈ.எல். றதீம்(மீஸானி) நடத்தினார்.

இதன்போது பெருந்தொகையான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன், ரமழான் வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர்.

(அ)

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பேச்சுவார்த்தைக்கு இறுதி நேரத்தில் வருகைதராத முதலாளிமார் சம்மேளனம்!

### கடுமையாக எச்சரித்த இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்

(ஹஸ்பர் ஏ.எச்)

தோட்டத்தொழிலாளர்களின்சம்பள அதிகரிப்புக்கு இ.தொ.கா தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இன்றைய தினம் சம்பள நிர்ணய சபையில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைக்கு இறுதி நேரத்தில் முதலாளிமார் சம்மேளனம் வருகை தராது தங்களது அழற்சிய போக்கை வெளிப்படுத்தியுள்ளமைக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கடுமையாக கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் சம்பள நிர்ணய சபை ஊடாக தீர்வு எட்டப்படும் நிலையில், முதலாளிமார் சம்மேளனம் பேச்சுவார்த்தைக்கு வருகை தராது அசமந்த போக்கில் செயற்பட்டு வருகிறது.

தோட்ட தொழிலாளர்களின் விடயத்தில் உரிய தீர்வு கிடைகாவிடின் இ.தொ.கா கடும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என முதலாளிமார் சம்மேளனத்திற்கு செந்தில் தொண்டமான் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

அரசாங்கத்தால்நிர்ணயிக்கப்பட்ட சம்பள நிர்ணய சபையிடம் அலட்சிய போக்கை கடைப்பிடிக்கும் முதலாளிமார் சம்மேளனம், தோட்டத்தில் தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளை



எவ்வாறு அணுகுவார்கள் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டு. இதனால் தான் இ.தொ.கா இவர்களுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் போக்கை கடைப்பிடிக்கின்றது.

இவர்களுக்கு ஒரு சதவீதமேனும் சம்பள அதிகரிப்பு வழங்குவதில் உடன்பாடு இல்லை. எனவே தோட்ட தொழிலாளர்களின் நலன் கருதி இ.தொ.கா முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிராக போராட்டம் முன்னெடுக்க தயாராகி வருகிறது எனவும் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## வவுனியா – நெளுக்குளம் குளத்தினுள் சடலம் மீட்பு அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

வவுனியா, நெளுக்குளம் குளத்தினுள் இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளம் காண உதவுமாறு நெளுக்குளம்பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெளுக்குளம் - குளக்கட்டு பாதையூடாகச் சென்ற நபர் ஒருவர், குளத்தினுள் சடலம் மிதப்பதை அவதானித்தார். இதையடுத்து அவர் நெளுக்குளம் பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

குளக்கட்டின் மேற்பகுதியில் ஒரு சோடி காலணியும் காணப்படுகின்றது.

இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளைத் தடவியல் பொலிஸார் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து முன்னெடுக்கின்றனர்.

சடலத்தை அடையாளம் காண உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சடலமாகக் காணப்படும் நபர் மஞ்சள் நிற மேற்சட்டையுடன் சாரமும் அணிந்துள்ளார். அவர் 55 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட வயதுடையவராக உள்ளார்.

(அ)








## யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் முதலாவது அதிபரின் நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் முதலாவது அதிபர் திருமதி ஹறியெட் வின்ஸ்லோவின் நினைவு தின நிகழ்வு இன்று பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது

இக்கல்லூரியில் 1824-1833 ம் ஆண்டு வரை அதிபராக கடமை புரிந்தவரின் பணியைப் பாராட்டி, பாடசாலையின் 200 ஆவது ஆண்டில் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதோடு விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வேலுப்பிள்ளை பத்மதயாளன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தென்னிந்திய திரிச்சபையின் பங்குத்தந்தைகள், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (01)

## வாகன விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக தகவல்

இலங்கையில் வாகன விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் சஜித் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நேற்றைய தினம் ஜனாதிபதி ஊடகமையத்தில் போக்குவரத்து அமைச்சு மற்றும் வீதிபாதுகாப்பு தேசியசபை இணைந்து நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் முச்சக்கர வண்டிகள் மோதிக்கொள்வதால் இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கையில் அதிவேக வீதிகளுக்கு வெளியில் இடம்பெறும் விபத்துக்களிலேயே அதிகளவானோர் மரணிக்கின்றனர்.

நாளாந்தம் 10 பேர் வரையில் உயிரிழக்கின்றனர். எனவே, விபத்துக்களை மட்டுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்த வேண்டும், என்று தெரிவித்துள்ளார். (04)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP.
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP.
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள், தொலைபேசி ஊடாகவோ, WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!


NALIN Information Technologies Pvt Ltd.
AMD
NEW YEAR
Special Offer
Lenovo
hp
DELL
LENOVO IDEAPAD 15AMN7
AMD RYZEN 3-7320U,
8GB, 512GB, 15.6" DISPLAY,
WINDOWS 11
2 YEAR WARRANTY
PRICE - 142,000/=
LENOVO IDEAPAD 3 15ALC6
AMD RYZEN 5 -5500U,
8GB, 512GB, 15.6" DISPLAY,
WINDOWS 11,
2 YEAR WARRANTY
PRICE - 230,000/=
LENOVO IDEAPAD 3 15ALC6
AMD RYZEN 7-5700U,
8GB, 512GB, 15.6" DISPLAY,
WINDOWS 11,
2 YEAR WARRANTY
PRICE - 255,000/=
HP 15S-EQ3619AU
AMD RYZEN 5 - 5625U,
8GB, 512GB, 15.6" DISPLAY,
Windows 11 + MS Office (Genuine)
2 YEAR WARRANTY
PRICE - 195,000/=
DELL INSPIRON 3525
AMD RYZEN 7-5825U,
8GB, 512GB, 15.6" DISPLAY,
WINDOWS 11, 2 YEAR WARRANTY
PRICE - 255,000/
Free Gifts
BAG & EARPHONES
CALL US : 076 359 4359 | 077 766 7975 | 076 359 4364
*Terms and conditions apply